# காஞ்சி

நிறுவனர்: அறிஞர் அண்ணா

மலர்: 10 | திருவள்ளுவராண்டு 2004 ஐப்பசி 26 (11-11-73) | இதழ்: 18


★

உள்ளே......


போஜராஜனும் காமராஜரும்
(தம்பிக்கு அண்ணாவின் மடல்)

★

அரிசி வழங்கும் அரசு
(தலையங்கம்)

★

இதயச் சிலை
(கட்டுரை)

★

மறு வாழ்வு
(சிறுகதை)

★

மெல்லிய காதல்
(தொடரோவியம்)


★

## தமிழர் முரசு

பாவேந்தர் பாரதிதாசன்

★

உயர்வென்று கொட்டுக முரசே—நல்ல
உண்மைத் தமிழர்கள் வாழ்வு!
அயர்வில்லை அச்சமிங் கில்லை—புவி
ஆளப் பிறந்தவன் தமிழன்.
உயர்வென்று கொட்டுக முரசே!

அயல் என்று கொட்டுக முரசே!—உற
வான திராவிடர் அல்லார்!
துயர் செய்ய எண்ணிடும் பகைவர்—திறம்
தூள் என்று கொட்டுக முரசே!
உயர்வென்று கொட்டுக முரசே!

அறிவுள்ள திராவிடர் நாட்டில்—சற்றும்
ஆண்மை யில்லாதவர் வந்து
நமர் பசிகொள்ள நம்சோற்றை—உண்ண
நாக்கைக் குழைப்ப துணர்ந்தோம்
உயர்வென்று கொட்டுக முரசே!

தமிழ்நாடு தமிழருக் கென்றே—இந்தச்
சகத்தில் முழக்கிடு முரசே
நமை வென்ற நாட்டினர் இல்லை—இதை
நாற்றிசை முற்றும் முழக்கு!
உயர்வென்று கொட்டுக முரசே!


விலை: 0-25 காசு

# இதயச் சிலை

கவிஞர் பல்லவன்

ஆருயிர் அண்ணனே!

நின் இனிய உயிர் இருந்தமிழ் நாட்டில் பரவிக் கிடக்கும் காற்றில் கலந்திருப்பதால் என் நெஞ்சப் புலம்பலைக் காற்றலைகள் மூலம் நின் காதுகட்கு அஞ்சல் செய்கிறேன்.

எங்களின் இறந்த காலத்திற்கும், நிகழ்காலத்திற்கும், எதிர்காலத்திற்கும் காரணமாக இருந்த நீ காலமாகிவிட்டாய்! நாங்கள் காலத்தால் ஆற்ற ஒண்ணா சோகத்தின் சொந்தக்காரர்களாகி விட்டோம்!

முதலாளித்துவ முதலைகளின் மூர்க்கத்தனமான தாக்குதல்களையும்,

மதங்கொண்ட மதவெறியர்களின் வன்முறை வெறியாட்டங்களையும்,

சதைகிழித்துத் தின்னும் சாதி ஓநாய்களின் பாய்ச்சல்களையும்,

ஆதிக்கபுரியினரின் அரசியல் ஏதேச்சாதிகாரக் கொடுமைகளையும்,

ஆரியமாயையின் நரித்தனங்களையும் தாங்கித் தாங்கி எங்கள் இதயங்கள் இறுகிக் கல்லாகி விட்டதண்ணா.

நின் அறமொழியால் எதையும் தாங்க எங்கள் இதயங்கள் பழகிக் கொண்டன அண்ணா.

மானசீக குருவான துரோணருக்கு மாணவன் ஏகலைவன் வஞ்சகம் அறியாது கட்டைவிரலைக் காணிக்கைத் தந்தானும்.

எங்கள் அறிவின் அறிவே!

கள்ளமறியா உனக்கு எங்கள் உள்ளங்களை என்றோ காணிக்கைப் பொருளாக்கி விட்டோம் என்பது இந்தத் தலைமுறை கண்ட உண்மை.

தாயின்மேல் பாசம் அதிகமா? தன்மேல் அன்பதிகமா? என்பதைப் பரிசோதித்துப் பார்க்கத் தன் காலடியே கதியென்று கிடக்கும் காமுகனைத் தூண்டிப் பெற்ற தாயின் நெஞ்சாங்குலையைப் பிடுங்கி வரச்சொன்ன வஞ்சகி ஒருத்தியின் கதையை நீங்கள் உணர்வுபொங்க உரைமழை பொழியுங்கால் அதிலே நனைந்து மகிழ்ந்தவர்கள் நாங்கள்!

எங்களைப் பொறுத்தவரை எங்கள் தாயினும் சாலப் பரிந்து அறிவுப்பால் ஊட்டிய அண்ணனே உன்மீதே எங்களுக்கு அன்பதிகம் என்பதை நின் உள்ளம், உயிர், அணு ஒவ்வொன்றும் அறிந்ததே. ஒரே தாய் வயிற்றில் நாமெல்லாம் சேர்ந்து பிறக்க அந்தத் தாய் வயிறு தாங்காது என்பதால் தனித் தனியே தாய் வயிற்றில் பிறந்து தம்பிகளானோம் எனக் குடும்பப் பாசத்தோடு அடிக்கடி நீ கூறுவாயே அந்தத் தாய்மார்களின் இதயங்களை நீ கேளாமலே-நாங்கள் பறித்து வாராமலே—அவர்களே தன் தலை மகனான உன்னிடம் அன்போடு உள்ளங்களை ஒப்படைத்த உலக அதிசயம் இந்த வையகம் அறியா வரலாறாகும்.

மொழிக்காக, இனத்துக்காக, நாட்டிற்காக, அரசியல், சமூக, பொருளாதார விடுதலைக்காக நீ அல்லும் பகலும் அயராது உழைத்துழைத்துப் பொன்னுடலை விட்டுப்போய் விட்டாய். சிலைவடிவில் நின்னுடலைக்காண எங்கள் இதயங்கள் துடியாய்த் துடிக்கின்றன அண்ணா!

சிலம்புதந்த கண்ணகிக்குச் சிலையெடுக்கச் சேரமாமன்னன் இமயத்திலே கல்லெடுத்தான். செந்தமிழ் நாடு தந்த அண்ணனே உனக்குச் சிலை எடுக்கச் சமுதாய அநீதிகளால் கல்லாய் இறுகிக் கிடக்கும் எங்கள் இதயங்களையே எடுத்துக் கொள்ள விழைகிறோம்.

சுமைதாங்கிக் கல்லாக எங்கள் இதயங்கள் இருப்பதைவிட நின் சூரியத் திருவுருவைக் காட்டும் பணிக்குப் பயன்படுவதிலே எங்கள் இதயங்கட்கு உலகப் பெருமை கிடைக்கும் என்பதை நாங்கள் உளமார அறிவோம்-

மரகதக் கற்களால் புத்தனுக்குப் பௌத்தர்கள் சிலைவடித்ததுபோல், நவரத்தினக் கற்களால் உனக்குச் சிலை சமைக்க எங்களால் முடியும். நவமணிக் குவைமீது உனக்கு மோகமில்லை என்பதை இந்த நாடே நன்கறியும் ஆதலால், அவைகளால் செய்யப் படும் சிலைவடிவங்களில் நீ இருக்கவே மாட்டாய் என்பதால் உனக்குப் பிடித்தமான பகுத்தறிவு செறிந்த எங்கள் இதயங்களாலே உன் உருவைச் சமைக்க உயிராசை கொண்டுள்ளோம் அண்ணா!

எந்த இதயங்களிலே நீ இருந்தாயோ—இருக்கின்றாயோ—இருப்பாயோ அந்த இதயங்களைச் சிலைகளாக்க எங்களை அநுமதியுங்கள் அண்ணா!

இதோ...எங்கள் இதயங்களைச் சிலைகளாக்கும் வேலை தொடங்கிவிட்டது! உளியோசை நிகர்த்த உயிரோசை ஒலிப்பதை உயிரின் உயிரே நீ செவி மடுப்பாயாக!

கையளவு நெஞ்சந்தானே அதில் சிலை செய்ய முடியுமா என்று எங்கள் அறிவு எங்களை வினா மூலம் தடுத்துவிட முடியாது.

ஒரு சிறு குன்றிமணிக்குள் தந்தத்தால் செய்ய இருபது யானைகளை அடைத்து அகிலப் புகழ்சுமக்கும் கைவினைத் திறங்கொண்டவர்கள் நாங்கள் என்பதால் சிறுமை பற்றிய சிந்தனை எங்களைச் சந்திக்க அஞ்சும்.

சீரகச் சம்பா அரிசியில் நின் செந்தமிழ் உருவைச் செதுக்கிச் காட்டிய சிற்பியை நாங்கள் இன்னம் இழந்து விடவில்லை.

நீயோ குறளைப்போல் சிறிய உருக்கொண்டு பெரிய இமயத்தையே உன்னுள் அடக்கி உயர்ந்திருந்தாய்! உன்னருந் தம்பியராகிய நாங்கள் வடிவத்தில் சிறிய நெஞ்சைப் பெற்றிருந்தாலும் வானளாவ உயர்த்திக் காட்டும் வல்லமையை—வரத்தை உன்னிடம் தவம் செய்யாமலே பெற்று விட்டதை மறந்தோமில்லை.

எங்கள் இதய தெய்வமே! இவ்வாறு உனக்கு எழுத்தாஞ்சலி செய்யும் என்னை ஏளனம் செய்வோர் —பிதற்றல் என்போர் பித்தம் தெளிய, என் இதயத்தைச் சிலையாக்கி விட்டுச் சீக்கிரம் உன்னைச் சந்தித்து வாழ்த்து பெற வருகிறேன் அண்ணா! வந்து விடுகிறேன் அண்ணா! வாழிய அண்ணா!

"காஞ்சி"

ஆண்டுச் சந்தா ரூ. 16 (மலர் உட்பட) ஆறுமாதச் சந்தா ரூ. 8

மலர் 10 | 11—11—73 | இதழ் 18

# அரிசி வழங்கும் அரசு

இன்றைய இந்தியத் துணைக்கண்டத்தின் பல மாநிலங்களில் பஞ்சம் தலைவிரித்தாடும் பரிதாப நிலையைத்தான் நாம் பார்க்கின்றோம்.

ஆனால் உணவுச் சிக்கலைத் திறமையாகச் சமாளித்து, உற்பத்தியை மிகுதியாகப் பெருக்கி உபரி மாநிலமாகத் திகழும் ஒரே மாநிலம், நம் ஒப்பற்ற தமிழ் மாநிலம் ஆகும்.

கேரளத்தில் படிஅரிசி ஆறு ரூபாய்; கருநாடகத்தின் சில பகுதிகளில் கடுமையான பஞ்ச நிலை; குசராத் மாநிலத்தில் சோளம்கூட கிடைக்காத சோகநிலை. உத்திரப் பிரதேசத்திலோ உணவுத் தட்டுப்பாடு; பீகாரிலோ அதுவே பெரும் பிரச்சனை ......பிற மாநிலங்களிலும் கொடுமையான விலை ஏற்றத்தின் கோரப் பிடியில் சிக்குண்டு குலை நடுங்கும் சூழ்நிலை.

இந்நிலையில், உணவு உற்பத்தியில் தன்னிறைவு பெற்றிருப்பதோடு, தாராளமாகப் பிற மாநிலங்களுக்கும் கொடுத்து உதவும் தாயுள்ளங் கொண்ட மாநிலமாகத் திகழுவது, தமிழக மாநிலம் ஆகும்.

கேரளாவுக்குப் பல்லாயிரம் டன் அரிசி; குசராத்திற்கு உணவுப் பொருள் உதவி; மேற்கு வங்கத்தின் துர்க்கா பூசைக்கு, மூவாயிரம் டன் அரிசி; என இதுவரை மற்ற மாநிலங்களுக்குத் தமிழக அரசு அளித்துள்ள அரிசியின் அளவு ஏறத்தாழ ஒரு லட்சத்து முப்பதாயிரம் டன் ஆகும்.

இந்நிலையில், மத்திய அரசின் இருப்புக்கும் ஒரு லட்சம் டன் தமிழ்நாடு அரசு வழங்கியுள்ளது,

பேரறிஞர் அண்ணா தலைமையில் 1967ல் கழகம் ஆட்சிப் பொறுப்பேற்றபோது, இரண்டு வாரங்களுக்கு மட்டுமே போடக்கூடிய அளவுக்குத்தான் அரிசி இருப்பு இருந்தது. அதற்கு முன் ஆட்சி செய்த காங்கிரசாரால் செய்ய முடிந்த சாதனை அவ்வளவுதான்.

கழகம் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு, பல்வேறு வகையில் உணவு உற்பத்தித் திட்டங்கள் வகுக்கப் பெற்றன. உற்பத்தியைப் பெருக்கும் பல்வேறு விதை வகைகள் கண்டு பிடிக்கப்பட்டன; உரங்கள் எளிதாகக் கிடைக்க வழிவகை காணப்பட்டது. கோடிக்கணக்கான ரூபாய் விவசாயிகளுக்குக் கடனாக வழங்கப்பட்டது. பல்லாற்றானும் பசுமைப் புரட்சித் திட்டம் பரவலாக்கப்பட்டது. பலன்?

தமிழகம் உணவு உற்பத்தியில் தன்னிறைவு பெற்றுள்ளது; பிற மாநிலங்களுக்கு உதவும் வகையில் உபரி மாநிலமாகத் திகழும் உன்னத நிலையையும் அடைந்துள்ளது.

"உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே" என்பர். உணவுப் பொருள்களை வழங்கி உயிர்களைக் காக்கும் மாநிலமாகத் தமிழகத்தை மாற்றிய பெருமை அறிஞர் அண்ணா அமைத்த கழக அரசுக்குத்தான் உண்டு; அவர்வழி நடக்கும் தமிழவேள் முதல்வர் கலைஞருக்குத்தான் உண்டு.

பிறமாநிலங்களுக்கும் அரிசி வழங்கும் அரசு, ஏக இந்தியாவிலேயே கழக அரசுதான்; கலைஞர் அரசுதான்.

பிறர்க்குக் கொடுத்துதவும் இப்பண்பினைப் பலரும் பாராட்டுகின்றனர். பாராட்ட வேண்டிய மத்திய அரசுக்கோ, இது பொறுக்கவில்லை.

அழுக்காறு கொண்ட மத்திய அரசின் அறிவிப்போ, அனைவரையும் திகைக்கவைக்கிறது.

மத்திய அரசின் மூலம்தான் பிறமாநிலங்களுக்கு அரிசி வழங்கபட வேண்டும்" என்ற மத்திய அரசின் மமதையான அறிவிப்பு எதைக் காட்டுகிறது? மாநிலங்கள் தங்களுக்குள் இணக்கமாக இருந்து விட்டால் நமக்கு என்னவேலை? என்ற இறுமாப்பு நிலையைத்தானே!

ஆள நினைப்பது தவறில்லை; அடக்கியாள நினைப்பது தான் தவறு. என நாட்டு நலனில் நாட்டம் கொண்டவர்கள் எல்லாம் கருத்து அறிவித்துள்ளனர்.

"அரிசி வழங்குவதில்கூட அதிகாரம் செலுத்த முனையும் மத்திய அரசின் இந்த ஆணவப்போக்கே, மாநில சுயாட்சிக் கோரிக்கையை மேலும் வலுவடையச் செய்யும் எனத் தமிழக முதல்வர் மாண்புமிகு கலைஞர் அவர்கள் தெரிவித்துள்ள கருத்து, நாட்டு மக்கள் அனைவரையும் சிந்திக்கத் தூண்டும் நற்கருத்து என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

அனைத்து அதிகாரங்களையும் தன்வசமே வைத்துக்கொள்ள வேண்டும் என விரும்பும் மத்திய அரசின் போக்கு, நாட்டின் எதிர்கால ஒற்றுமை உணர்வுக்கு உகந்ததன்று.

நாட்டு ஒற்மையில் நாட்டம் உள்ள அனைவரும், மத்திய அரசின் அதிகாரங்கள் மாநிலங்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என்றுதான் எண்ணுகிறார்கள். இதனை உணர்ந்து, மத்திய அரசு செயல்பட வேண்டும் என விழைகின்றோம்.

—மணிவேந்தன்.

## அமைச்சர் என். வி. என். 62-வது பிறந்த நாள்!



மணிவிழாச் செல்வர் மாண்புமிகு என். வி. என். வாழ்க! உழைப்பால் உயர்ந்த உத்தமத் தலைவரே! நாட்டுக்கு உழைக்கும் நல் அமைச்சரே! இந்தி ஏகாதிபத்தியத்தை எதிர்த்து குடும்பத்தோடு சிறை புகுந்த தங்களின் தியாக வரலாற்றுக்குத் தலை வணங்குகிறோம்! சுயமரியாதைச் சுடரொளியே வாழ்க! தன்மான இயக்கத்தின் தலைவரே வாழ்க! கழகக் காவலரே வாழ்க! வாழ்க!!

"காஞ்சி."

# காதலிக்கு கடிதம்

**கஸ்தூரி நடராசன்**

**நினைவிழந்த காதலிக்கு,**

நீண்ட இடைவெளிக்குப் பிறகு நினைவின் அலைகளால் உந்தப்பட்டு எழுதப்படுகிற இந்தக் கடிதம் உன் கண்ணில் படுகிறதோ இல்லையோ, அப்படியே இந்தக் கடிதம் உன் கண்ணில் பட்டாலும் இந்தக் கடிதத்தை எழுதியவன் அன்றைய உன்னுடையவன் தான் என்கிற உண்மையை உன்னால் ஒப்புக்கொள்ள முடிகிறதோ இல்லையோ அது எனக்குத் தெரியாது.

என்னைப் புரிந்து கொள்ள இரண்டு வரிகளைச் சுட்டிக் காட்டி விளக்க முற்படுகிறேன்.

"மலரின் மலர்ச்சியை ஏற்ற மனம் ஏன் அதன் வாட்டத்தை ஏற்க ஏன் மறுக்க வேண்டும்"

"இரயிலில் பிரயாணம் செய்யும் பிரயாணி இறங்க வேண்டிய இடம் வந்தவுடன் இறங்கித் தானே ஆகவேண்டும்"

உனக்கு நினைவிருக்குமானால், ஐந்தாண்டுகளுக்கு முன்பு ஒரு நாள் இரவு பணிரண்டு முப்பது மணிக்கு இந்த அறிவுரைகளைச் சொல்லி பிரியாவிடை பெற்றாய். நினைவிருக்கிறதா?

பிரித்திட முடியாமல் இருந்த நம் உறவை 'உன் திருமணம்' என்ற வார்த்தை பிரித்துவிட்டது. ஒருமையத்தில் நிலையாக நின்றிருந்த நம்மின் பயணம் வடக்காகவும் தெற்காகவும் பிரிந்தது.

ஆனாலும் தெற்கே சென்று கொண்டிருந்த உன்னை, வடக்கே பயணம் செய்து கொண்டிருந்த என்னால் மறக்க முடியாதது உண்மைதான்.

அதே நேரத்தில் தெற்கே பயணம் செய்த உன் நெஞ்சம் என்னை நினைத்திருக்குமா? என்பதை யூகம் செய்து பார்க்க முடியவில்லை, என்னால்.

உன் திருமணம் உன் வாழ்க்கையின் வசந்த காலத்தை ஏற்படுத்தும் என நினைத்து உன் வாழ்க்கைப் பாதையில் நான் மிக்க பெருந்தன்மையோடு ஒதுங்கிக் கொண்டேன்.

பிரிய முடியாத நிலை, காதலுக்கு இல்லை என்று சொல்வதை விட, பிரிகின்ற பிரிவால் உதிக்கின்ற நினைவுகளுக்கு இடப்படும் பெயர்தான் "காதல்" என்பது என் முடிவு. இணைகின்ற உள்ளங்கள் உடலின் கவர்ச்சியால் ஈடுபட்டு விட்ட பின்பு அது "காமமா" "காதலா" இல்லை இவை இரண்டின் மோதலா என்று விளக்கிட முடியாது. விளக்கிட முடியாத அந்த நிலைக்கு நாம் தரும் மாற்றுப்பெயர்தான் 'குடும்பம்' அதிலும் நீ சிக்கவில்லை.

நீ என் காதலியாக இருந்த வரை எண்ணத்தாலும், இதயத்தாலும் கனியாய் இனித்தாய், பனியாய் துளிர்த்தாய், நல்ல சங்கீதமாய் தொனித்தாய். நம் உறவு பிள்ளைகளைப் பெற்றெடுக்கும் பன்றிக் காதல் அல்ல. மாறாக அன்பைப் பெற்றெடுக்கும் ஆன்மீகக் காதல்.

கவிஞர் கண்ணதாசன் பாஷையில் சொல்லப் போனால் "நம் காதல் சரீரத்தின் தாளம் அல்ல அது ஆத்மாவின் ராகம்"

நீ இப்போது திருமணமானவள் என்ற முத்திரையைப் பெற்றவள். சரீரத்தின் தாளத்தை அனுபவித்தவள். ஆனால் ஆத்மாவின் ராகத்தை ஒருசேர மறக்க அல்ல கொன்றுவிடத் துணிந்துவிட்டாய்.

என் ஆத்மா உன் காதலின் ராகத்தைப் பாட மறக்கவில்லை. அதிலே ஒரு தனி இனிமை குளுமை நிறைவு எல்லாமே இருந்திடத்தான் செய்கிறது. நீண்ட நெடுந் தொலைவில் நீ இப்போது இருந்தாலும், உன் செவ்விதழ்கள், அவைகள் உதிர்த்திடும் அந்திவானச் சிரிப்பு, உண்மையைச் சொன்னால் அவனியில் அதற்கோர் தனி "ரம்யம்" இருக்கத்தான் செய்தது.

இத்தனை இன்ப நினைவுகளுக்கு இடையே கேள்விப்படுகிறேன் நீ ஆமாம் உன் பெயரைக்கூட நான் தெரிவிக்க விரும்பவில்லை, நீ நாகரீக ஓட்டல் ஒன்றில் கிளப் லேடியாம். பணவேட்டை ஆட முற்பட்டு விட்டாய். பகல் வேஷம் உன்னைக் கவர்ந்து விட்டது. பாவை நீ பணத்திற்காக உன் இளமையைக் கூத்தாட விட்டு விட்டாயே அம்மா.

இல்லை தெரியாமல்தான் கேட்கிறேன் ஆண்டவன் உன்னை எத்தனை நாள் உலகத்தில் உலவ விடப் போகிறான். அந்தக் கணக்கு உன் கைக்கு வந்து விட்டதா. உன் அழகுக்கும் இளமைக்கும் எத்தனை நாள் உத்தரவாதம். இவைகளை எல்லாம் தெரிந்து வைத்துக்கொண்டுதான் உன் ஆசைகளை பணத்தின் பக்கம் திருப்பி விட்டுவிட்டாயா. நல்லதையும் கெட்டதையும் கூட்டிக் கழித்தால் உன் வாழ்வில் மிஞ்சப் போவது — பெண்ணினம் விரும்பாத "அவமானம்" ஒன்றுதான்.

"உன் திருமணம் என்ன வாயிற்று" என்ற கேள்வியிலே எழுந்த கடிதம்தான் இது. நீ இப்போது சிங்காரச் சென்னையிலே செல்வங் கொழிக்கும் சீமான்களின் குழந்தையாக குலாவுகிறாயாம். பார்த்தாயா உன் நிலைமையை. மனைவி என்ற சரித்திரத்தைப் படைக்க முடியாத சோகசரித்திரமாகி விட்டது உன் சரித்திரம்.

மலைஉச்சியில் இருந்து சிறிது சறுக்கி விட்டால் போதும், அடுத்து மிகச்சுலபமாக நாம் விழும் இடம் படுபாதாளம்தான். அதே மலைமீது ஏறவேண்டுமானால் எத்தனை பாடுபடவேண்டும். ஒரு கணம் உன் வாழ்க்கையில் யோசிக்க மறந்தாய். ஆகவேதான் நீ இப்போது படுபாதாளத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறாய். நீ தற்போது நடத்துவதற்கு "வாழ்க்கை" என்று பெயரிட முனைவதா அல்லது போராட்டம்,, என்று சொல்வதுதான் பொருந்துமா.?

உன் திருமணம் ஆண்டவன் முன்பு ஏற்றிவைக்க இருக்கும் விளக்கென்று நினைத்தேன். ஆனால் அது ஆண்களின் மனதை எரிக்க முற்பட்ட தீவட்டி என்பதை இப்போது என்னால் உணர முடிகிறது. பெண், மணம் வீசும் மலராக இருக்கவேண்டும். நீயோ கல் மலராகி விட்டாயே. எதற்கும் தயார் என்ற நிலையைப் பெற்று விட்டாய். அப்படிப்பட்ட நிலை ஏற்பட்டபோது ஆண்களிடம் ஒளிக்க வேண்டியதோ மறைக்க வேண்டியதோ உன்னிடம் எதுவும் இருக்க முடியாது. இதையே வேறு விதமாகச் சொல்லப்போனால் மிஞ்சி இருப்பது உன்னிடம், "வெட்கமும் இல்லை." "மானமும் இல்லை."

இந்த இரண்டும் இல்லாத நீ எப்படி பெண்ணாக முடியும்.

உன்னைக்காண விரும்பும்,

சந்திரன்

★



தம்பி,

"நானோ என் மனைவியோ ஒரு குற்றமும் செய்யாதபோது என் தாயாருக்கு கோபம் வருகிறது.

நானோ என் தாயாரோ ஒரு தவறும் செய்யாதபோது என் மனைவிக்குக் கோபம் வருகிறது.

என் தாயாரோ மனைவியோ ஒரு பிழையும் செய்யாதபோது எனக்குக் கோபம் வருகிறது.

"இது யாருடைய குற்றம் அரசே!"

இப்படி ஒரு கேள்வியைப் புலவர் கேட்டபோது, மன்னன் திகைத்துப் போயிருப்பான் என்றுதானே எண்ணிக்கொள்வாய்.

ஐயம் அகற்றுக! என்று புவியாளும் மன்னன் புலவரிடம் கேட்பது இயல்பு. இஃதோ அஃதன்று, புலவர் கேட்கிறார் விடை தரும்படி, மன்னனை நோக்கி.

நிதி மட்டும் படைத்தவனாக இல்லை அம்மன்னன்; நிரம்ப மதிபடைத்தவன். கேள்விக் கான விடை புரிந்துவிட்டது. பணியாளை அழைத்து, புலவருக்கு தேவைப்படும் பணம் கொடுத்தனுப்பக் கட்டளையிட்டான்.

மன்னனுடைய மதிநுட்பத்தைக் கண்ட புலவர் பெரிதும் பாராட்டினார்.

காரணமற்ற கோபம்! ஒவ்வொருவருக்கும்! ஒருவர்மீது ஒருவருக்கு—புலவர் அந்த நிலையைத்தான் எடுத்துரைத்தார்.

வறுமை நோய் வாட்டும்போது மட்டுமே இந்த நிலைமை இருக்க முடியும்—கோபம்—ஒருவர்மீது ஒருவருக்கு தன் குடும்பத்தை வறுமை வாட்டி வதைக்கிறது என்பதைத்தான் புலவர் எடுத்துரைத்தார் என்பதனை உணர்ந்துகொண்ட மன்னன், பரிசுப் பணம் கொடுத்து புலவரின் வறுமையை நீக்குவதன் மூலம் அவர் குடும்பத்தில் குதூகலம் மலர்ந்திடச் செய்தான்.

போஜராஜனுடைய அறிவுத் தெளிவையும், அவர் புலவர்களை ஆதரித்த பண்பினையும் விளக்கிட இந்தக் கதையினைக் கூறுவர்; ஆனால் தம்பி! நான் இதனை எடுத்துக்காட்டுவது அதற்காக அல்ல; வறுமை என்னென்ன செய்துவிடும், எவரெவருக்குக் கோபம் எழ வைத்துவிடும் என்பதை விளக்க.

புலவர், கற்றறிவாளர், காரணமற்று கோபம் கொள்ளக் கூடாது என்பதனை நன்கு அறிவார்; ஆயினும் புலவரே சொல்லுகிறார்; ஒரு குற்றமும் செய்யாத என்மீது என் தாயாருக்கும் மனைவிக்கும் கோபம்வருகிறது. என் தாயாரும் மனைவியும் ஒரு பிழையும் செய்யாதிருக்கும்போதே எனக்கு அவர்கள் மீது கோபம் வருகிறது—என்பதனை.

உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்திக் கொள்ளத்தக்க அறிவாற்றல் பெற்ற புலவருக்கே வறுமை, இந்த நிலைமையை உண்டாக்கிவிட்டது என்றால், பாட்டாளிகளையும் ஏழை எளியோரையும் நடுத்தர வகுப்பினரையும் வறுமை என்னென்ன எண்ணிட வைத்திடும், என்னென்ன செய்திட வைத்திடும் என்பதனை விரிவாகவா விளக்கிட வேண்டும்.

அதிலும் தம்பி! கடினமாக உழைத்திடும் உத்தமன், வாழ முடியாமல் தவித்திடும்போது, அவன் மனம் என்ன பாடுபடும்!

தன்னை உருக்குலையச் செய்திடும் விதமான உழைப்பு, தனக்கு வாழ்வு அளிக்காமல், வேறு எவரெவரோ பளபளப்புப் பெற்றிடவே பயன்படுகிறது என்பதை உணரும்போது அவன் உள்ளம் எரிமலையாகாமலிருக்க முடியுமா?

அந்த எரிமலை வெடித்து ஆத்திரக் குழம்பு குபுகுபுவெனக் கிளம்பி வரும்போது, அதனைத் தடுத்திட தணியச் செய்திட எத்தனை நல்லுரைகள் தந்திடினும் என்ன பயன்?



பொறுத்துக்கொள்! பொழுது புலரும்!!—என்று கூறி எத்தனைக் காலத்துக்கு நம்பிக்கையை ஊட்டிக் கொண்டிருக்க முடியும்?

போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்து என்ற போதனை செய்து எத்தனைக் காலத்துக்கு அவனை இல்லாமை கொட்டுமிடத்தில் அடைத்து வைக்க முடியும்?

அவனைச் சுற்றிலும் சுகபோகிகள், களியாட்டம் அவன் உள்ளத்தில்மட்டும் குமுறல்! எத்தனைக்காலம் அவன் சகித்துக்கொள்வான்?

அன்றலர்ந்த மலரின் கவர்ச்சி, அந்தி வானத்தின் அழகு, ஓவியத்தின் நேர்த்தி, மணிமாடத்தின் எழில் ஆகியவைப்பற்றி மகிழ்ச்சியுடன், கண்டவர் பேசிக் கொண்டிருப்பதை, எப்படி விழி இழந்த ஒருவன் கேட்டுக்கொண்டிருக்க முடியும்! ஏழையின் நிலையும் அதுபோன்றதே.

அவன் கொதிப்படைகிறான்; குமுறுகிறான்; வெறுப்புணர்ச்சி கொள்கிறான்; தன்னை இந்த நிலையில் தள்ளிவைத்துவிட்டு, உல்லாசபுரியினர் உண்டு களித்துக் கிடந்திடும் கொடுமையினை அழித்தொழித்தாகவேண்டும் என்று ஆவேசம் கொள்கிறான்.

அவனுடைய கண்கள் பல காலம் புனலைக் கொட்டிக் இறுதியில் வரண்டு போகின்றன; அவைகள் பிறகு கனல் கக்கத் தொடங்குகின்றன! அப்போது அவனைப் பார்த்து, ஆத்திரம் ஆகாது! வெறுப்புணர்ச்சி பெருந்தீது! இதனை ஆண்டவன் பொறுத்துக் கொள்ளமாட்டார் என்றெல்லாம் எவரேனும் பேசிட முற்படின், அவன் ஓர் ஏளனச் சிரிப்பொலி கிளப்பிடுவான்; அந்த ஓசை எந்த பீரங்கிச் சத்தத்தையும் அடக்கிவிடத்தக்கதாகி விடும்.

ஏர் பிடிப்பவன்தானே! ஏனோ தானோதானே! இடுப்பொடிந்தவன்தானே! என்று அவனைப் பற்றி எண்ணிக்கொண்டிருந்தவர்களின் கண்களில் அச்சம் கப்பிக்கொள்ளும் வடிவம் கொண்டிடும் நிலை பெறுவான். சாவுக்கு அஞ்சாத நிலையினனாகிவிடுவான்! எதனையும் அழித்திடும் வல்லமை பெறுவான். விம்மிக் கிடந்த ஏழை விழித்துக்கொண்டான் என்பது அதன் பொருள். சிட்டுகள் வல்லூறை எதிர்த்திடும் காலம் என்று கவிஞர் இக்பால் இதனைத்தான் குறிப்பிடுகிறார்.

விம்மிக் கிடந்திடும் ஏழை விழித்துக்கொள்ளும் நிலைபெறும்போது, அவனிடம் இதமாகப் பேசியும், அவனுக்காகப் பரிவு காட்டியும், அவனைக் காத்திடும் உறுதி தெரிவித்தும், அவனை அந்தக் கதிக்கு ஆளாக்கிய செல்வவான்கள்மீது சீற்றத்தைக் கொட்டுவது போலக் காட்டியும், நிலைமை மோசமாகிடாமல் தடுத்திட முனைபவர் சிலர் உண்டு.

**காமராஜர், தம்மை அந்தப் பணிக்கு ஒப்படைத்து விட்டார்!!**

ஏழைபங்காளர் என்றும், எளியோருக்காக வாதாடுபவர் என்றும், அவருக்கு விருதுகள் வழங்கப்படுகின்றன. பணக்காரர்களின் ஆதிக்கத்தை அவர் அடக்கிடுவார், ஒடுக்கிடுவார் என்று பேசப்படுகிறது.

அவரேகூட, ஏழையைக் காத்திட வேண்டும் என்ற ஆர்வமும், உறுதியும் கொண்டவராக இருக்கக்கூடும்.

போலி நாடகம் ஆடுகிறார் என்றுகூடக் கூறத் தேவையில்லை.

உள்ளபடி ஏழைகளை ஈடேற்ற வேண்டும் என்ற எண்ணம் கொண்டவராகவே இருக்கிறார் என்றே வைத்துக்கொள்வோம்.

ஆனால் அவரால் அதனைச் சாதிக்க முடியாது.

ஆற்றலற்றவர் என்று கூறவில்லை, கொள்கை நாணயமற்றவர் என்றும் கூறவில்லை; அவர் உள்ள இடம், தனக்கென ஏற்படுத்திக்கொண்ட சூழ்நிலை, அவருடைய வல்லமையைச் சொல்லளவு ஆக்கிவிடுகிறது.

அவர் எவ்வளவு ஆர்வத்தை வரவழைத்துக் கொண்டு பேசினாலும், சீமான்கள் அதுபற்றித் துளியும் அஞ்சாமலும், கவலைப்படாமலும் இருப்பதற்குக் காரணம், பணக்காரர் ஆதிக்கத்தை ஒழித்துக் கட்ட அவரால் முடியாது என்ற உணர்வுதான்; நம்பிக்கைதான்.

**பணக்காரர்களை நடுக்கூடத்தில் உட்கார வைத்துக்கொண்டு அவர் சோஷியலிசம் பேசுவது, நுனிமரத்தில் இருந்து கொண்டு அடிமரத்தை வெட்ட முனைவது போன்றதாகும்.**

இதனை இங்குள்ள செல்வவான்கள் மட்டுமின்றி, வெளிநாட்டுச் சீமான்கள் குறிப்பாக அமெரிக்க நாட்டு கோட்டீஸ்வரர்கள் மிக நன்றாகப் புரிந்து கொண்டிருக்கிறார்கள். ஆகவேதான் அவர் பேசிடும் ஜனநாயக சோஷியலிசம் பற்றி அவர்கள் துளியும் பொருட்படுத்தவில்லை.

ஏழைகளை மயக்க மட்டுமே அவருடைய ஜனநாயக சோஷியலிசப் பிரசாரம் பயன்படும் என்பதை சீமான்கள் மிக நன்றாக உணர்ந்து கொண்டுள்ளனர்.

அதனால்தான் கோட்டீஸ்வரரான பிர்லா, மறுபடியும் காங்கிரஸ் கட்சிதான் நாடாளவேண்டும் என்ற தமது விருப்பத்தை ஒளிவு மறைவு இல்லாமல் சில திங்களுக்கு முன்பு வெளியிட்டார்.

ஏழையின் மனம் எரிமலை ஆகி, புரட்சித் தீ கிளம்பிடாது தடுத்திட வேண்டுமானால், அந்த ஏழை, தனக்காக வாதாடவும் போராடவும், தன் நிலையைச் செம்மைப்படுத்தவும் பணியாற்றிட ஒருவர் இருக்கிறார், அவர் ஆற்றல் மிக்கவர், அஞ்சா நெஞ்சினர் என்ற நம்பிக்கையைப் பெறவேண்டும்.

இன்று காமராஜர் மூலம் அந்த நம்பிக்கை ஊட்டப்படும் முயற்சி நடைபெற்று வருகிறது.

சமூக அமைப்பும் பொருளாதார முறையும் புட்சிகரமாக மாறுதிருக்கச் செய்திட, இப்படி ஒருவர் தேவைப்படுகிறார்.

ஆகவே, செல்வவான்களே இன்றைய தினம்,: காமராஜரின் செல்வாக்கை வலிவுள்ளதாக்கும் காரியத்தில் ஈடுபட்டுள்ளனர்.

உண்மையிலேயே காமராஜரால் தங்கள் ஆதிக்கத்துக்கு ஆபத்து ஏற்படும் என்ற நிலை இருந்திடின், சீமான்கள் காமராஜரை கவிழ்த்திட முனைவர், உச்சி மோந்து முத்தமிட மாட்டார்கள்.

**ஜனநாயக சோஷியலிசம் பேசும் காமராஜர், தங்குவது மாளிகையில் குலவுவது சீமான்களுடன்!**

அவர்களுடன் குலவிக்கொண்டே அவர்களின் கொட்டத்தை அடக்க முடியாதா என்று கேட்பரேல், தம்பி! முடியாது என்று கூறிட, 'மாமேதை' தேவையில்லை.

அதுமட்டுமல்லாமல், ஒரு சில பணக்காரர்கள் பீதிகொண்டுவிடப் போகிறார்கள் என்ற கவலையுடன் அவர் வெளிப்படையாகவே, தாம் பேசும் சோஷியலிசத்தில் பணக்காரர்கள் இருக்கலாம், பணம் திரட்டலாம், ஆனால் அவர்கள் ஏழைகளின் தர்மகர்த்தாக்களாக இருக்க வேண்டும் என்று அறிவித்துவிட்டார்.

இந்த 'தர்மகர்த்தா' தத்துவம் இன்று நேற்று ஏற்பட்டது அல்ல! பலப்பல நூற்றாண்டுகளுக்கு முன்பிருந்தே உலவிக்கொண்டிருக்கிறது.

சீமான் ஆடம்பரமாக உடுத்திக் கொண்டிருக்கிறானே என்று எண்ணி அருவருப்பு அடையாதே! நர்த்திமிக்க நெசவாளர்களின் வாழ்க்கை உயருவதற்காகவே அவர் விலையுயர்ந்த வேலைப்பாடுமிக்க ஆடைகளை உடுத்திக்கொள்கிறார்.

கோட்டைபோன்ற மாளிகையில் கொலுவிருக்கிறாரே என்றெண்ணிக் கொதிப்படையாதே! கட்டடக் கலைஞர்கள் புகழ்பெற்றிடட்டும் என்ற நோக்கத்தால்தான் மாடமாளிகை கட்டினார்; தன் சுகபோகத்துக்கு அல்ல!—என்று தத்துவம் பேசப்பட்டது.

இவைகளுக்கெல்லாம் ஒரு காலத்தில் மதிப்பு இருந்தது! இன்று? இவைகளை ஏற்பார் இல்லை.

காலமும் கருத்தும் மாறிவிட்டிருப்பதை அறியாததால் காமராஜர், இந்த தர்மகர்த்தா தத்துவம் பேசிக்கொண்டிருக்கிறார்.

தர்மகர்த்தா வேலைபார்ப்பதே ஒரு புண்ணிய காரியம் என்றும், தர்மகத்தாவைத் தட்டிக் கேட்பதே பாபகாரியம் என்றும்,

தர்மகர்த்தாவின் பொறுப்பிலேயே சொத்து இருக்கவேண்டும், அதுதான் முறை என்றும் நம்பப்பட்டு வந்தகாலம் அல்ல இது.

அத்தகைய நம்பிக்கை இருந்துவந்த நாட்களிலேயேகூட, தர்மகர்த்தாக்களாக இருந்து வந்தவர்கள், நெறி தவறி நடந்துகொண்டனர், சுயநலக்காராயினர் என்ற குற்றச்சாட்டுகள் பலமாக உலவின. அந்தநிலை இன்று மேலும் எந்த அளவுக்கு ஆகிவிட்டிருக்கும் என்று கூறத் தேவையில்லை.

செல்வவானாக ஒருவன் இருப்பது அவன் செய்த புண்ணியத்தால் என்றும், ஏழையாக ஒருவன் நெளிவது அவன் செய்த பாபத்தால் என்றும் நம்பப்பட்டு வந்தது முன்பு. இன்று அந்தவிதமான பேச்சு ஏளனம் செய்யப்படும் கட்டம் பிறந்துவிட்டிருக்கிறது.

ஆனால் காமராஜர் மூலம் அந்தப் பத்தாம்பசலி நம்பிக்கையை மீண்டும் புகுத்திடலாம் என்று அரசியலில் இடம் பெற்றுக் கொண்டுள்ள செல்வவான்கள் எண்ணுகின்றனர்.

நெறி தவறாதவராக ஒரு தர்மகர்த்தா இருக்கிறார் என்றே வைத்துக்கொள்வோம்; அத்தகையவர் என்ன செய்திடுவார் என்று நாம் எதிர்பாக்கலாம்?

உள்ள சொத்து தன் சுகபோகத்துக்கு என்று கருதிவிடாமல், பொது நன்மைக்கு, அதிலும் குறிப்பாக ஏழை எளியோர்களின் நன்மைக்காகச் செலவிடப்படவேண்டும், அதற்காகவே அந்தச் செல்வம் தன்னிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது என்று கருதவேண்டும்.

அந்தக் கருத்தின் அடிப்படையில், ஏழைக்கு இதம் செய்யத்தக்க ஏற்பாடுகளை மேற்கொள்ளவேண்டும்.

அன்னதானம், சத்திரம் சாவடி கட்டுதல், பண உதவி தருவது போன்றவைகளை மேற்கொள்ளவேண்டும்.

வானமே கூரையாய், விண்மீன்களே விளக்காய், தரையே பஞ்சணையாகக் கொண்டு தத்தளிக்கும் தரித்திரவானுக்கு வீடுகட்டித் தரவேண்டும்.

அவன் பிழைக்க வழியின்றி வேதனைப்படும்போது, காப்பாற்றுவதற்கான பண உதவி செய்திடவேண்டும்.

ஐயோ பாவம்! அவனும் மனிதன்! அவன் வதைபடப் பார்த்திடப் போமா' என்று எண்ணி, ஏழையின் வேதனையைத் துடைத்திட, தன்னிடம் உள்ள செல்வத்தைத் தந்துதவவேண்டும்.

இருளும் அழுக்கும் நிரம்பிய இடத்திலே ஏழையை இடர்ப்பட விடாமல், அவன் வாழ்வுக்கு ஒளியும் நறுமணமும் கிடைத்திடச் செய்திடவேண்டும்.

தன்னிடம் உள்ள பணத்தைக்கொண்டு, தன் மூன்றடுக்கு மாடியை நான்கு அடுக்கு உள்ளதாக மாற்றிக் கொள்ளாமல், இருட்குகை போலுள்ள இடத்திலிருந்து ஏழையை விடுவித்து அவனுக்கு இல்லம் அமைத்துத் தரச் செலவிடவேண்டும்.

தன்னிடம் உள்ள செல்வத்தைக் கொண்டு, செயற்கைக் குளம் அமைத்து அதிலே பன்னீரைத் தேக்கி வைத்து, அதிலே நீந்திவிளையாடி மகிழ்ந்திட முனையாமல், அந்தப் பணத்தைக்கொண்டு, ஏழைக்குப் போதுமான குடிதண்ணீர் கிடைத்திட ஊருணி அமைத்தளிக்க வேண்டும்.

உள்ள பணத்தைக்கொண்டு தனக்கொரு மணி முடி தயாரித்துக்கொள்ள முனையாமல், ஏழையின் பிணி போக்க அப்பணத்தைச் செலவிடவேண்டும்.

தம்பி! யோசித்துப் பார்த்தால் இப்படிப் பல செய்திடலாம் என்பது புரியும்.

செல்வான்கள் இவ்விதமாகவா தமது செல்வத்தைப் பயன்படுத்துகிறார்கள் என்று ஆராய்ந்து பார்த்திடின், நம்மைக் கவலை கப்பிக்கொள்ளும். ஆனால் நான் உன்னை அது பற்றிக்கூட ஆராய்ந்திடச் சொல்லவில்லை நான் கூறுவது வேறு; ஒரு அடிப் படைப் பிரச்சினை.

**தர்மகத்தா, நெறி தவறாது நடத்திடினும், சமூக அமைப்பு மாறாது.**

ஒருவர் தர்மகர்த்தாவாக இருக்கும் நிலை எதைக் காட்டும் என்றால், அவர் போன்ற ஒருவருடைய தரும சிந்தனையை எதிர்பார்த்துப் பலர் ஏழைகளாக இருந்தாக வேண்டும் என்பதனை.

ஏழ்மை இருந்து தீரவேண்டும்; அப்போதுதான் ஏழைபங்காளர் என்று ஒருவர் திகழ்திட முடியும் ஆக, தர்மகர்த்தா முறை என்பது, ஏழை என்றும் பணக்காரர் என்றும் சமூகம் இரு பிரிவாக இருப்பதையும் அதனால் விளைந்திடும் வேதனையையும் மாற்றிவிடாது! சொல்லப் போனால் அந்த முறை இருந்து தீரும்.

இதனைப் பல நூற்றாண்டுகள் பார்த்தான பிறகுதான் சிந்தனையாளர்கள், தானம்—தருமம்— என்பவைகள் ஏழை பணக்காரன் என்ற பேதத்தை அடியோடு போக்கிடா என்பதை அறிந்தனர்; அவனிக்கு எடுத்துரைத்தனர்,

**ஏழை என்று ஒரு பிரிவும் பணக்காரர் என்றோர் பிரிவும் ஏன் ஏற்படுகிறது என்பதைக் கண்டறிந்து, அந்த நிலை ஒழிந்திட வழி செய்தாக வேண்டும் என்று தெரிவித்தனர்.**

**அதன் விளைவாக மனித குலத்துக்குக் கிடைத்த கருத்துக் கருவூலமே சோஷியலிசம் என்ற தத்துவம்!**

தர்மகர்த்தா முறை பரீட்சிக்கப்பட்டு அது போதுமானதாக இல்லை என்பது மெய்ப்பிக்கப்பட்ட காரணமாகவே, புதிய முறை வகுக்கப்பட்டது.

அந்தப் புதியமுறையே சமதர்மம்— சோஷியலிசம்.

இந்தப் புதியமுறையை எப்படி நடத்திச் செல்வது என்பதைச் சிந்தித்துச் செயலாற்றவேண்டிய காலம் இது. ஆனால், இந்தக் காலத்தில், மக்களை பின்னேக்கித் துரத்தும் விதமாக, 'தர்மகர்த்தா' முறைபற்றிப் பேச முற்படுகிறார், காமராஜர்.

இன்று பிரபுக்கள் பலரிடம் சேர்ந்துள்ள சொத்திலே பெரும் பகுதி, ஒரு காலத்தில் தரும காரியத்துக்காக அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டு, மெள்ள மெள்ள அந்தச் சொத்தினை அவர்கள் தங்கள் சுக போகக் கருவியாக்கிக் கொண்டனர் என்பதனை பொதுமக்கள் நன்கு புரிந்து கொண்டுள்ளனர்.

கோயிலுக்காக, வேத பாடசாலைக்காக, அன்ன தானத்துக்காக, அனாதைகளின் பராமரிப்புக்காக என்று குறிப்பிடப்பட்டு ஒப்படைக்கப்பட்ட பெரு நிதி, பிறகு சீமான்களின் சொந்தச் சொத்து ஆகிவிட்ட கதை பலப் பல.

**இன்றைய சீமான்களிலே பலர், நேற்றிய தர்மகர்த்தாக்கள்!**

இப்படி தோற்றுப் போய்விட்ட ஒரு தத்துவத்தை, புதை குழியிலிருந்து வெளியே எடுத்து வைத்துக் கொண்டு, தமது புதிய கண்டுபிடிப்பு இது என்று பேசிப் பார்க்கிறார் காங்கிரஸ் தலைவர்.

சிலர் செல்வத்தைக் குவித்துக் கொள்வதற்கான ஏற்பாட்டினை வைத்துக்கொண்டு, பலர் பஞ்சைகளாகித் தவித்திடும் நிலையையும் வைத்துக்கொண்டு, இல்லாதாரின் இன்னலை உடையவர் துடைத்திடுவார் என்று உபதேசம் பேசி வருவது, கண்ணைப் பறித்துவிட்டு, கைக்கோல் தருவதற்கு ஒப்பானதாகும்; பாம்புப் புற்றுக்குப் பக்கத்தில் பச்சிலைச்செடி நட்டுவைத்துக் காட்டுவது போன்றதாகும்; கூரையைக் கொளுத்திவிட்டு, குடம் குடமாகத் தண்ணீர் தர முனைவது போன்றதாகும்.

இது பிரச்சினையைத் தீர்த்திடும் முறை அல்ல; மூடி மறைக்கும் முயற்சி.

ஆகவேதான் தம்பி! நாம் இந்த தர்மகர்த்தா முறை பற்றிய பேச்சினை ஏற்க மறுக்கிறோம்.

மேலும், தம்பி! இந்தப் போதனையை இவருக்கு முன்னாலே எப்படிப்பட்டவர்களெல்லாம் செய்து பார்த்து பலன் காணாது வாடிப் போயினர் என்பதை எண்ணிப் பார்த்திடும்போது, கவலை அதிகமாகித்தான் தீரும்.

மகாத்மா காந்தியார் தமது ஆயுட் காலம் முழுவதும் இந்த போதனையைத் தான் செய்துவந்தார்!

ரஷிய நாட்டு தத்துவ மேதை டால்ஸ்டாய் வேதாந்த வித்தகர் இந்தப் போதனை நடத்தியவர்—அறிவோமே.

அவர்களின் உபதேசங்கள் 'பூஜாமாட' ஏடுகளாக்கப் பட்டு விட்டனவேயின்றி, புதிய முறையையா, சமூகத்திலே புகுத்தின? இல்லையே!

மகாத்மாவின் உபதேசம் சாதித்துக் கொடுக்காத தர்மகர்த்தா முறையையா, புதிய பெரியவரின் பேச்சு தந்திடப் போகிறது? அப்படிச் சொல்லிட ஒன்று நெஞ்சமுத்தம் நிரம்பவேண்டும், அல்லது ஏய்க்கும் திறமை மிகுந்திருக்க வேண்டும்.

தர்மகர்த்தா முறை செயல்பட்ட காலத்திலே கட்டப்பட்ட சத்திரங்களும் சாவடிகளும் ஏராளம். ஆனால் வளர்ந்துவிட்ட ஏழையின் தொகையோ அதனினும் ஏராளம்.

தர்மகர்த்தாக்களாகச் சிலர் விளங்கிட வேண்டுமென்றால், அவர்களிடம் பெருநிதி சேர்ந்திட வேண்டும்; அவர்களிடம் பெருநிதி சேர்ந்திட வேண்டுமென்றால், நாட்

டிலே உற்பத்தியாகிற செல்வத்திலே பெரும் பகுதி அவர்களிடம் போய்ச் சேர்ந்தாக வேண்டும்; பெரும்பகுதி செல்வம் செல்வர் சிலரிடம் சேர்ந்திடுமானால், சமூகத்தில் பெரும் பகுதி வறண்டுதானே கிடந்தாக வேண்டும்.

இதனால்தான், தம்பி! ஏழை பணக்காரன் பேதம் நீடித்துக்கொண்டு வருக்கிறது. இதனால்தான் தம்பி! வறுமையால் தாக்குண்டோர் தொகை வளர்ந்தபடி இருக்கிறது. இதனால்தான் தம்பி! வறுமையின் தாக்குதல், குடும்பங்களிலே குமுறலை, காரணமற்ற கோபம் கொண்டிடும் நிலையினை மூட்டி வைக்கிறது. இதனை உணர்ந்தோர், உயர் பதவியினர் தர்மகர்த்தா தத்துவம் பற்றிப் பேசுவதைக் கேட்கும்போதே, எள்ளிநகையாடத்தான் செய்வர்.

தர்மகர்த்தா தத்துவத்தைப்பற்றிக் காமராஜர், பேசி, அதுகேட்டு செல்வவான்கள் மனம் உருகி, ஐயகோ! நாம் சுகபோகத்தில் இருக்கிறோம், நமது உடன்பிறந்தோர் வறுமையிலே உழல்கிறார்களே! நாம் கனிச்சாறு பருகிறோம். அவர்கள் கால்வயிற்றுக் கூழும் கிடைக்காமல் தவிக்கிறார்களே! நமக்குப் பஞ்சணை, அவர்களுக்குக் கட்டாந்தரை! நாம் மாளிகையில், அவர்கள் மரத்தடியில்! நாம் புதுப்புது இன்பம் தேடிப் பெறுகிறோம், அவர்கள் புழுப் போலப் துடிக்கிறார்களே! இது சரியா, முறையா? மக்களிலே பெரும் பகுதியினர் வேதனையில் உழலும் போது, நாம் வாழ்க்கையையே விழாவாக்கி மகிழ்ச்சியில் மூழ்கிக்கிடப்பதா! மனிதாபிமானமாகுமா இது! சேச்சே! என்ன கொடுமை! என்ன கொடுமை! இரும்புப் பெட்டியிலே பணம், ஏழை, குடிசையில் பிணமாகிறான், பசி நோயினால்! எதற்கு இந்தப் பணம்? என்னிடம் உள்ள பணம்? என்னிடம் உள்ள பணம் என் பணம்? ஏழையின் வியர்வை அல்லவா பணமாகமாறி என்னிடம் வந்தது? அந்த ஏழைகளைக் காத்திட இந்தப் பணம் பயன்படட்டும் என்றல்லவா இத்தனைப் பணம் என்னிடம் ஒப்படைக்கப்பட்டது? குளத்திலே நீரைத் தேக்கிவைப்பது எதற்கு? ஊரார் பருகிட உதவவேண்டும் என்பதற்கல்லவா? முதலைகள் புரண்டிடவா தடாகம்!! நான் தனவான்! கனவான்! சீமான்! பொருள் என்ன? தனவான் என்பது தருமவான் என்பதன் மறுபெயரல்லவா? கனவான் என்றால் மக்களைக் கவனிப்பான் என்றல்லவா பொருள்? சீமான் என்றால் சீர்செய்வோன் என்றல்லவா பொருள்! இதுதானே தர்மகர்த்தா முறை! இதனை இதுநாள்வரை மறந்து கிடந்தேனே! மக்கள் துரோகியாகிக்கிடந்தேனே! இப்போதல்லவா உண்மையை உணர்ந்தேன்! கண்திறந்தது! இதயம் மலர்ந்தது! எல்லாம் பெரியவர் காமராஜர் தந்த தருமகர்த்தா உபதேசம் கேட்டதனால். இதோ, இனி என் செல்வம், ஏழைக்கு இதம் அளிக்க! என் கடன் பணிசெய்து கிடப்பதே! யான் பெற்ற செல்வம் யாவர்க்கும் சொந்தம்! தந்தேன்! தந்தேன்! நான் தருமகர்த்தா! தருமகர்த்தா!-என்றெல்லாம் நெஞ்சு நெக்குருகக் கூறி, தம்மிடம் உள்ள செல்வத்தை அள்ளித் தந்து ஏழையின் அல்லலைப் போக்கிடவா கிளம்புகின்றனர்? இல்லையே! ஒரு புன்னகையை உதிர்க்கின்றனர்; புதுத்தெம்பு கொள்கின்றனர்!

மதியற்றோரே! கேட்டீரா காமராஜர் பேச்சை! பணக்காரர்கள் என்றாலே பாதகர்கள் என்று பேசி வந்தீரே! சீமான் என்றால் ஏழைக்கு வைரி என்று ஏசி வந்தீரே! முதலாளி என்றால் பாட்டாளிக்குப் பகையாளி என்று பழி சுமத்தி வந்தீர்கள்களே! காமராஜர் பேச்சைக் கேட்டீர்களா? நாங்கள் தர்மகர்த்தாக்கள்! ஆமாம்! தர்மகர்த்தாக்கள்! எம்மிடம், எமது தகுதி திறமை, பண்பு பார்த்து, செல்வம்வந்து குவிந்திருக்கிறது. இந்தப் பணம் எமக்கேவா சொந்தம்? இந்தப் பணத்தைக்கொண்டு நாங்களா சுகபோகத்தில் மூழ்கிடப் போகிறோம். நீரைத் தன்னிடத்தில் நிரப்பி வைத்துக்கொண்டிருக்கும் குளம் எப்படி ஊராருக்குப் பயன் தருகிறதோ அப்படி ஏழைகளுக்கு இதம் செய்திட இந்தச் செல்வம்? எம்மிடம் பணம் இருக்கிறதே என்பதற்காக, பகைத்துக் கொள்ளவாமா? உங்கள் நலனுக்காக அல்லவா இந்தப் பணம் எம்மிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது! **நாங்கள் தந்திட! நீங்கள் பெற்றிட—!** நாங்கள் தந்திட வேண்டுமானால், எம்மிடம் பணம் சேர்ந்திட வேண்டுமல்லவா? அப்படிச் சேர்ந்திடும்போது, அடிக்கிறான் கொள்ளை, குவிக்கிறான் கோடி என்று கொக்கரிக்கிறீர்களே, நியாயமா? நாங்கள் குவித்திடாவிட்டால், உங்களுக்கு உதவி யார் செய்திடுவர்? எப்படிச் செய்திட முடியும்!! தர்மகர்த்தா இல்லாவிட்டால் தருமம் எப்படி நடக்கும்? தருமம் நடக்காவிட்டால், தரித்திரத்தால் தவித்திடும் உங்கள் வேதனை எப்படிப் போகும்? ஆகவே இனியாகிலும், அருவருப்பு பொறாமை, பகைகொள்ளாதீர்கள்! மாளிகையில் மந்தகாசமாக வாழ்கிறான் என்று கோபம் கொள்ளாதீர்! மாளிகை வாசியினால்தானே மண்குடிசைக்காரனின் இன்னலைத் துடைக்க முடியும் உங்கள் இன்னலைத் துடைக்கத்தானே எம்மிடம் இலட்சங்கள் உள்ளன! நாங்கள் தர்மகர்த்தாக்கள்! எங்களை வாழவிடுங்கள், வளரவிடுங்கள்!! வாழ்த்துங்கள்! வணங்குங்கள்! உமக்கு வாழவளிக்கும் வல்லமையாளர் நாங்கள்!! என்று ஏழையைப்பார்த்துக் கூறிடும் துணிவு பெறுகின்றனர்.

சுயநலக்காரன்

சுரண்டல்காரன்

சுகபோகி

பணம்பெருத்தான்

இரும்புப் பெட்டிக்காரன்

என்றெல்லாம் பணக்காரர்கள் கண்டிக்கப்பட்டால். ஒரு கொதிப்பு எழும்; குமுறிக் கிடந்தவர்கள் சீறி எழுவர்; கூப்பிய கரங்கள் தாக்கிட எழும்; புனல் சொரிந்த கண்கள் கனல் கக்கும், புரட்சி மூளும், நமது நிலை அழியும். ஆனால் நாம் **தர்மக்கர்த்தாக்கள்** என்று காமராஜரே கூறிவிட்டார். ஆகவே ஏழை எளியோர் நம்மை வாழ்த்துவர், வணங்குவர்; நமக்கு எதிர்ப்பு எழாது, பகை மூண்டிடாது, நமது ஆதிபத்தியம் அழிந்துபடாது!!—என்று எண்ணுகின்றனர். அந்த எண்ணம் ஒரு துணிவைத் தருகின்றது.

காமராஜரின் தர்மகர்த்தாப் பேச்சு எதிர்காலத்தைப்பற்றி எண்ணி எண்ணி அஞ்சிக்கிடந்த பணக்காரர்களுக்குப் புதுத் தெம்பும், துணிவும் தந்துவிட்டது.

முதலாளித்துவ முறைக்கு இருந்து வரும் எதிர்ப்பு முறிந்திட வழி செய்கிறது.

ஏழையைச் சீமானிடம் பணிந்திடச் செய்கிறது.

தம்பி! இவைகளை அறிந்து, திட்டமிட்டு காமராஜர் இந்த தர்மகர்த்தா முறைபற்றிப் பேசுகிறார் என்று நான் கூறவில்லை. விளைவு தெரியாமல், தமது பேச்சு எதற்குப் பயன்படுத்தப்பட்டுவிடும் என்பதை உணர்ந்தறியாமல், தித்திப்புப் பேச்சுப் பேசிவைப் போம், ஏழையின் உள்ளக்குமுறல் குறையட்டும் என்ற எண்ணத்தில் பேசுகிறார். தம்மீது வீசப்பட்டு வந்த பகைச் சொற்களும், எறியப்பட்ட எதிர்ப்பு களும் மாறி, மதிப்புமிக்க ஒரு பட்டப் பெயர்—தர்ம கர்த்தா—என்ற பெயரல்லவா கிடைக்கிறது. இந்தப் பெருமையை நமக்கு அளித்தவர் காமராஜர் அல்லவா? அவரல்லவா நமக்கு உண்மை நண்பர்! அவர் வாழ்க! அவர் கூறிடும் தர்மகர்த்தா தத்துவம் வாழ்க!—என்று வாழ்த்துகின்றனர். 'சோடசோப சாரம்' செய்யவும் சொர்ணபிஷேகம் செய்யவும் முனைகின்றனர்! திருடர்களுக்கு நடுநிசி உழைப்பாளர் என்று சிறப்புப் பெயர் கொடுத்திடுவார் உண்டா? இல்லையல்லவா? அப்படி யாரேனும் துணிந்து கூறிடின், கூறுபவர் பெருந்தலைவர் வரிசையினராகவு யிருப்பின், 'நடுநிசி உழைப்பாளிகள்' திருவிழா அல்லவா கொண்டாடுவர்!

> காமராஜர் நடத்தும் ஜனநாயக சோஷியலிச விழாவில், சீமான்கள் மகிழ்ச்சி யுடன் கலந்துகொள்வதன் காரணம் தமக்கு, மதிப்புமிக்க ஒரு பட்டத்தை—தர்மகர்த்தா என்ற பட்டத்தைச் சூட்டி னாரே நம்மை எதிர்த்திடுவோரை அழைத்து ஏமாளிகளே! இவர்களை யாரென்று எண்ணிக்கொண்டு எரிச்சல் கொள்ளுகிறீர்கள்? இவர்கள் தர்மகர்த்தாக் கள்! என்று கூறுவதன் மூலம், நமக்கு ஒரு எதிர்காலத்தை உறுதிப்படுத்தியிருக்கி றாரே! இவருக்கல்லவா விழா எடுக்க வேண்டும் என்று கருதுகின்றனர்.

ஆனால் அவர்களும் உண்மையைக் கண்டறிய முனைய வில்லை. இந்த 'தர்மகர்த்தா' தத்துவம் சாஸ்திர மாக காப்பியமாக, கதையாக கவிதையாக, எப்படிப் பட்ட மாமேதைகளால் முன்பு தரப்பட்டது! எவ்வளவு சதுதியில், எளிதாக ஏழை மக்கள் அதனை மறந்து விட்டார்கள்! முன்பு தத்துவம் பேசியவர்கள், இன்றைய காமராஜரைக் காட்டிலும், பெரியவர் களல்லவா? அவர்களில் அருளாளர்கள் இருந்தனர், கவிவாணர்கள் இருந்தனர்; புலமை மிக்கோர் இருந்தனர்; புவி எங்கும் உள்ள நிலைமைகளைத் தெரிந்த அறிவாளர்கள் இருந்தனரே! அவர்கள் அன்று பேசினர் தர்மகத்தா முறை பற்றி. பேசி? கேட்டனர், தலை அசைத்தனர்! ஆனால், மீண்டும் மீண்டுமல்லவா அறம் அழிந்துபட்டது, செல்வச் செருக்கு கொக்கரித்துக் கூத்தாடிற்று.

அகவலாகவும் வெண்பாவாகவும் அறுசீராகவும் பிறவகையினதாகவும், உரைநடையாகவும் உரை யாடலாகவும், பேரறிவாளர்கள் எடுத்துக் கூறிவந்த தர்மகர்த்தா முறையினை—மிக எளிதான முறையில்,

அறம் செய விரும்பு

என்று நம் ஆன்றோர் சொல்லிவைக்கவில்லையா! அதனை திரும்பத் திரும்பக் கூறிக் கொண்டிருப்ப தால் விளையப்போகும் பலன் என்ன?

செல்வான்கள் தர்மகர்த்தாக்கள் என்ற பேச்சு, சமூகப் புரட்சி ஏற்படுத்தத் துணிவற்றவர்கள் நடத் திக் காட்டும் கண்ணுமூச்சி விளையாட்டு!

செல்வவான்களை தர்மகர்த்தாக்கள் என்று நாடாளும் பெரியவர்கள் கூறுவதைப் பயன்படுத்திக் கொண்டு முதலாளிகள் தங்கள் ஆதிக்கத்தை கெட்டிப்படுத்திக் கொள்வர்.

> இன்று காங்கிரசின் துணைகொண்டு முதலாளிகள் அந்தக் காரியத்தைத்தான் நடத்திக் கொண்டுள்ளனர்.

பணம் சிலரிடம் குவிந்திருக்கும்போது அதனை தரும கர்த்தா முறை என்று பேசி, பூசி மெழுகுகிறார்கள். ஏராளமான நிலபுலன்களை தமதாக்கிக் கொண்டி ருந்த ஜெமீன்தாரர்களை ஒழித்தபோது இந்த தர்மகத்தா தத்துவம் எங்கே போய்விட்டிருந்தது?

ஐநூற்றுச் சொச்சம் சமஸ்தானபதிகளின் பட்டத்தைத் தட்டிவிட்டபோது, இந்த தர்மகத்தா தத்துவம் ஏன் பதுங்கிக் கொண்டது?

> செல்வவான்கள், தர்மவான்கள் என் றால் ராஜாக்களும் ஜெமீன்தாரர்களும், கடவுளின் பிரதிபிம்பங்கள் அல்லவா!! ஒப்புக்கொள்வார்களா?

பணக்காரர்கள் ஏழைகளுக்காகவே சொத்தைப் பயன்படுத்தும் தர்மகத்தாக்களாக உள்ளனர் என்ற தத்துவம், அரசன் ஆண்டவனின் பிரதிநிதி, மகா விஷ்ணுவின் அவதாரம் என்ற தத்துவத்தோடு சேர்ந்து பிறந்ததாயிற்றே; அரசன் ஆண்டவனின் பிரதிநிதி என்ற தத்துவம் தகர்க்கப்பட்டுப் போனது போலவே, சீமான்கள் தர்மகர்த்தாக்கள் என்ற தத்துவமும் தூளாகிப் போகாமல் தப்பித்துக் கொள்ள முடியுமா!

> ஆனால் பலிக்கிறவரையில் பார்க்கலாம் என்ற முறையில் காமராஜர் இந்த தரும கர்த்தா முறைபற்றிப் பேசிவரலாம் என்று இருக்கிறார். இந்த தத்துவத்தில் முன்பு மக்களுக்கு இருந்துவந்த மயக்கம் இன்று பெருமளவு போய்விட்டிருக்கிறது. ஆகவே அவர்கள், காமராஜர், தருமகர்த்தா தத்துவம்பற்றிப் பேசிடக்கேட்டு கேலிப் புன்னகை செய்கின்றனர்.

பணக்கார ஆதிக்கத்தை ஏன் இன்னமும் விட்டு வைக்கிறீர்கள் என்று மக்கள் சீற்றத்துடன் கேட்கும் போது, அவர்களை சாந்தப்படுத்த காமராஜர்கள் இந்த தருமகர்த்தா தத்துவத்தைப் பேசிடலாம்.

பணக்கராரர்களிடம் ஏழைகள் பகை உணர்ச்சிக் காட்டும்போது, அதிலிருந்து தப்பித்துக்கொள்ள பணக்காரர், இந்த தருமகர்த்தா தத்துவத்தைப் பயன்படுத்திட முனையலாம்.

ஆனால், இதே தருமகர்த்தா தத்துவத்தை எடுத் துக்காட்டி, ஏழை, பணக்காரனை அவனிடம் உள்ள செல்வத்தை ஏழைக்கு இதம் செய்திடச் செலவிடும் படிக் கேட்கமுடியுமா? கேட்டிடின், பணக்காரர்கள் தருமகர்த்தா தத்துவத்தின்படி நடந்துகொள்ள





முன்வருவார்களா? வரமாட்டார்கள்! சீறுவர்! கொதித் தெழுவர்.

தருமகர்த்தா என்ற பட்டத்தை, தனவான் கனவான், சீமான்! என்ற பழைய பட்டங்களுடன் சேர்த்து இணைத்துக் கொள்ள மட்டுமே பணக்காரர்கள் இசைவார்கள். அந்த தத்துவத்தின்படி, தன் சொத்து தனது சுகபோகத்துக்கு அல்ல, ஏழையின் நன்மைக்கு என்று கருதிச் செலவிட்டுக் கொண்டிருக்க மாட்டார்கள்.

காமராஜர் பேசிடும் தருமகர்த்தா தத்துவத்தை நம்பிக்கொண்டு ஏழையர், செல்வர்களை அணுகி, ஐயன்மீர்! உலவிடும் மாளிகையும் அதிலுள்ள பெருநிதியும், வயலும் வனமும் அணிவனவும் பெறுவனவும், உம்முடையதன்று; எமக்கா உம்மிடம் ஒப்படைத்த செல்வமேயாகும்; நீவிர் எமக்காக இறைவனால் தருமகர்த்தா ஆக்கப்பட்டவர். எனவே, எடும்செல்வத்தை, கொடும் ஏழையர் துயர் போக்க என்று கேட்டிடின், என்ன கிடைத்திடும்?

தடியடி

சிறை

துப்பாக்கிச் சூடு!

'கேட்பதும் கிடைப்பதும்' என்ற தலைப்புடன், சிங்கைத் தோழர் உலகநாதன் என்பார் தந்துள்ள கவிதையின் பகுதி, செல்வவானின் போக்கை நன்கு எடுத்துக் காட்டுகிறது என்பதனால் அதனைத் தருகிறேன்.

"வாழ்வில்லை வளமில்லை
வலிவில்லை செழிப்பில்லை
சூழ்தொல்லை சிறிதில்லை
சுகமில்லை நலமில்லை" என்றால்
மரமுண்டு கயிறுண்டு
மரணத்தில் சுகமுண்டு
பிறகென்ன துயருண்டு?

பேசாதே போவென்று சொல்வார்—இவர்
கூசாமல் சாவென்று சொல்வார்—இங்கே
வாழ்வுக்கு வழி கேட்டால்
சாவுக்கு வழி காட்டிச் செல்வார்!

அவர்கள் கிடக்கட்டும் தம்பி! இரும்புப் பெட்டிக்கும் இதயத்துக்கும் ஈஸ்வரன் சம்பந்தம் வைக்கவில்லையே அம்மா! என்று உழவன் ஒருவன் கூறுவதாக நான் 'ஓரிரவு' என்ற கதையில் எடுத்துக் காட்டினேன், ஆண்டு பலவற்றுக்கு முன்பு. அவர்கள் அப்படித்தான் இருப்பார்கள். ஆனால் காமராஜருமா அப்படி இருக்கவேண்டும்.

**வாழ்வுக்கு வழிகேட்டால், வகையற்ற பேச்சை தத்துவமாக்கியா தருவது!**

இதென்ன புதிதா? மிக மிகப் பழையது! பலன் தருவதா? இல்லை! உபதேசக் குவியலுடன் சேர்த்து வைக்கத்தக்கது! அதைத்தான் தரமுடிகிறது அவரால்! அதற்கு மட்டுமே அவருக்கு அனுமதி கிடைத்திருக்கிறது.

தம்பி! துவக்கத்தில் காட்டினேனே புலவர் கேள்வி, அதனை மறுபடியும் படித்துப் பார்!

ஒருவர்மீது ஒருவருக்குக் காரணமற்றுக் கோபம் வருகிறது அரசே! அதற்கு என்ன காரணம்? என்றல்லவா புலவர் கேட்டார். அதற்கு இதயம் படைத்த மன்னன் என்ன பதில் அளித்தான்? நிலைமையை உணர்ந்து, பரிசுப் பணம் கொடுத்துப் புலவரின் வறுமையைப் போக்கினான்.

போஜராஜன் காலத்தில் காமராஜர் இருந்திருந்து, போஜராஜனிடம் போய் நிற்காமல் அந்தப் புலவர் காமராஜரிடம் போய்க் கேட்டிருந்தால், பதில் என்ன கிடைத்திருக்கும்? கோபமா! உமக்கும் வருகிறது, உம் மனைவிக்கும் வருகிறது, உமது தாயாருக்கும் வருகிறதா! காரணமற்றுக் கோபம் வருகிறதா! சரி! சரி! அதற்கு என்ன சொல்லுகிறீர்கள் என்று என்னைக் கேட்கிறீர்கள். சரி! சரி! கூறுகிறேன் கேள் ஐயா புலவரே! ஆறுவது சினம்!!—என்ற இந்தப் பதிலைத்தானே தந்திருப்பார்!!

அண்ணன்,

அண்ணாதுரை

9-10-66

தொடர் கதை :

# மெல்லிய காதல்

புலவர் தி. நா. அறிவுஒளி

புகழேந்தியின் உடலில் மின்னோட்டம் பாய்ந்தது; துடிதுடித்தான்; அவனுணர்ச்சிகள் துள்ளிக் குதித்தன; படபடப்பு அவனுடலில் ஆட்சிசெய்தது.

"வெள்ளிவீதி தன்னை மணக்க ஆவல் கொண்டிருக்கிருளா?..."

மல்லிகையார் வந்தார்.

அறப்பாவை அவரிடம் தங்கள் கருத்தைக் கூறினுள். மகனை ஏறிட்டுப் பார்த்தார் மல்லிகையார்.

"அம்மா, தம்பி வெள்ளிவீதியை மணக்க ஏன் மறுக்கப் போகிருன்? அப்பாவிடம் கூறினுல், அவருக்கு மிகவும் ஆறுதலாக இருக்கும்."

திடுக்கிட்டான் புகழேந்தி.

என்னுடைய அமைதியே திருமண இசைவாக எடுத்துக் கொண்டார்களே! என வியந்தான்; அதிர்ந்தான்; சோர்ந்தான்.

மல்லிகையார் மகனை நம்பிக்கையின்றிப் பார்த்தார். "குழந்தே, நீ வாய்திறந்து சொல்கிருய். புகழேந்தி வாய்திறந்து சொல்லவில்லையே!" என்ருர்.

புகழேந்தி தன் தாயை நிமிர்ந்து நோக்கினுன்.

"அம்மா, நீங்கள் எல்லாரும் முடிவு செய்வதை நான் எதிர்ப்பேனு? அதுவும் இந்தச் சூழ்நிலையில்? அப்பா நலமாகட்டும். இப்போது திருமணப் பேச்சு ஏனம்மா?"

அவன் உள்ளத்தின் அமைதி குலேந்தது. வாயின் தீர்ப்பை வளர் உணர்வு ஏற்ருல்தானே?

அவன் உள்ளக் கடல் பொங்கிக் குமுறியது. உணர்ச்சிப் புயல் சுழன்ருடியது; நிலேகுலேந்த அறிவு அவனுயிரை வாட்டி வறுத்தது. துடிப்பும் தவிப்பும் அவனை மென்றன.

நெஞ்சினுள்ளே ஒரு மலே முட்டி மோதி இடித்துக் கொண்டதோ? அந்தச் சுமையை இறக்க இனி அவனுல் முடியுமா?

அறப்பாவையும் சுடர்க் கொழுந்தும் விரைந்து சென்று ஒப்பிலழகரிடம் புகழேந்தியின் திருமண இசைவை அறிவித்தனர்.

ஒப்பிலழகர் ஆறுதலாக நெட்டுயிர்த்தார்.

## 43

வெள்ளை நிலா சிரிப்பதைக் கண்டு வியந்து கொண்டிருந்தன விண்மீன்கள்.

வான கூடத்தில் விரிக்கப் பெற்றவண்ணத் திட்டுகள் போல முகிற்படாங்கள் சிதறிக்கிடந்தன. கைதேர்ந்த ஓவியன் தன் நுண்மாண் நுழைபுலம் புலப்பட 'உயிர்கொண்டெழுமோ?' எனக் கண்டோர் வியக்கும் வண்ணம் தீட்டிவைத்தது போன்று உலகியற்கைப் பொருட்கள் பொலிவோடு விளங்கின.

அமைதியிலே களிநடம்புரியும் ஒப்பற்ற அழகைச் சுவைக்க வேண்டுமென்ருல்; அந்த இரவின் அமைதிலேயேதான் சுவைக்க முடியும். தெளிவும் குழப்பமும், அழகும் அச்சமும், வளமும் சோர்வும் ஒன்ருேடொன்று கூடிக் கலந்து குறும்பு விளேத்தது அந்நள்ளிரவில்!

வீட்டில் எல்லாரும் உறங்கி விட்டனர். அண்ணன் முகிலன் எப்போதுமே 'தூக்கத்தின் தோழன்.'

வெள்ளிவீதி இப்படியும் அப்படியும் பாயில் புரண்டாள். அவள் கழுத்தில் புதுப்பொன் சங்கிலி மின்னிச் சிரித்தது!

அவள் நெஞ்சிலே ஆர்வக் கனவுகள் சிரித்தன. நிலேகொள்ளாத உணர்ச்சிகளேக் கட்டவிழ்த்து விட்டாள். கடிவாளம் மாட்டிக் கட்டுத்தறியிலே இத்தனேக் காலம் பிணித்து வைத்துக் காத்துவந்த உணர்ச்சித் தவிப்புகள் இன்று உரிமை பெற்று விட்டன. எண்ணங்களின் ஏக்கங்கள், எழிலோவியக் கற்பனைகள், உள்ளுணர்ச்சிப் பேரிலக்கியங்கள் அத்தனையும் உண்மையாகப் போகின்றன.

ஆ!

அவளுக்கே அந்த உண்மையை நம்ப முடியவில்லே! ஆனுல்,

எப்படி நம்பாமலிருப்பது?

நேற்றுத்தானே சுடர்க்கொழுந்து, அறப்பாவை முதலியவர்கள் முறைப்படி வந்து மணம் பேசி, பரிசில் கொடுத்து மண உறுதிப்பாடு செய்தனர்! மண நாளும் குறிப்பிட்டாகி விட்டதே!

அடேயப்பா!

இன்னும் ஏழு நாட்கள் இருக்கின்றன!

அடுத்த ஏழாம் நாள் இரவு அவள் கன்னிப் பெண்ணுக இருக்கமாட்டாள்!

தலைவி!

சிலிர்த்தது வெள்ளிவீதியின் சுடர்மேனி. சிரித்தது அவள் இளமை உணர்ச்சி.

உடல்பொங்க, உள்ளம் பொங்க அறிவு பொங்க, இளமைப்புரட்சி பொங்க, பெண்மையின் வியப்புகள் பொங்க அலேகுலேந்தாள் வெள்ளிவீதி.

அவளால் அமைதியாகப் படுத்துக் கிடக்க முடியவில்லே.

எழுந்தாள்.

# வாழ்க்கைக்கு ஒரு பாடம்!

**எறும்புகளும் நமக்கு அறிவு புகட்டுகின்றன!**

## சேமிப்புப் பழக்கமே எதிர்காலத்திற்கு ஆக்கம் தரும்.

**சிறு சேமிப்புத் தரும் சிறப்பான திட்டங்களில் இரண்டு, தொடர்வைப்புத் தொகை திட்டமும் (ரெகரிங் டெபாசிட் திட்டமும்), வளரும் மாதச் சேமிப்புத் திட்டமும் ஆகும்.**

| | மாதம் செலுத்தும் தொகை | 5 ஆண்டு இறுதியில் கிடைப்பது |
|---|---|---|
| ரெகரிங் டிபாசிட் ... | ரூ. 5 | ரூ. 355 |
| | ரூ. 10 | ரூ. 710 |
| வளரும் மாதச் சேமிப்பு ... | ரூ. 5 | ரூ. 337.50 |
| | ரூ. 10 | ரூ. 675.00 |

**தற்போது, 1-7-72 முதல் இந்த இரு திட்டங்களுக்கும் புதிய சலுகை வழங்குகிறது, சிறு சேமிப்பு நிறுவனம். இந்தத் தேதிக்குப் பின்னர் இந்தத் திட்டங்களின் கீழ், கணக்குத் துவக்குபவர்கள் எதிர்பாராதவிதமாக மரணமடைய நேரிட்டால் 5 ஆண்டு இறுதியில் கிடைக்க வேண்டிய தொகை முழுவதும் உடனடியாக அவர்களது வாரிசுக்குக் கிடைக்கும்.**

**இந்த ஈட்டுறுதிச் சலுகையை வேறு எந்தச் சேமிப்புத் திட்டமும் அளிப்பதில்லை.**

**இன்றே ஒரு சிறு சேமிப்புக் கணக்கு துவங்குங்கள்.**

**சிறு சேமிப்புத் துறை,**
**தமிழ்நாடு அரசு.**


உள்ளத்தில் பொங்கும் உணர்ச்சிகளை யாரிடத்திலேனும் கொட்டி முழங்கினால்தான் ஆறுதல் உண்டாகும் என்ற தவிப்பு அவளை வாட்டியது. ஆனால்? யாரிடம் கூறுவது?

கவிழ்ந்து படுத்தாள். உடனே எழுந்து பல கணியருகே சென்றாள்.

வானிலே நாணம் சிந்த நகை சிந்தும் நிலவு நல்லாளைக் கண்டாள்.

குளிர்ச்சிமிக்க உளியால் இருண்ட உலகைக் குளிப்பாட்டும் ஓவிய நிலவின் உரை கடந்த ஒப்பில் பேரழகை உணர்வுப் பசியோடு பருகினாள்.

தண்ணிய தென்றல் அவளுடலுக்கு இனித்தது; உணர்வுச் சூடேற்றியது. மேனியெல்லாம் வெயர்த்தது. உள்ளத்தில் உணர்ச்சி வெயில் சுட்டெரிக்கும் போது வெயர்க்கத்தானே செய்யும்!

அவள் தூங்காமல் துடிதுடித்த இரவுகள் பலப்பல.

ஆனால்—

இன்றைய உணர்வு நிலையிலே இருக்கும் புதுமைத் துடிப்பு இதுவரை இருந்ததே இல்லை.

அவை நம்பிக்கையின்மையின் ஏக்கத் தவிப்புகள்!

இன்று?

நம்பிக்கை கனிந்த நனவிலக்கியத்தின் மென்மையான ஆசையின் அதிர்வுகள்.

ஏக்கத்தின் எதிரொலியும் கேட்காத வாழ்வாக அமையப்போகிறது அவள் வாழ்க்கை. அவளை வியப்பு விழுங்கியது.

ஆண்மையின் இலக்கணமான புகழேந்தியை எண்ணி எண்ணி ஏங்கித் துடித்தவளல்லவா வெள்ளிவீதி! அவள் கனவுகள் பொய்யாகுமோ என்ற கவலை அவளை எவ்வளவு அரித்தன இதுவரை!

ஆனால், புகழேந்தியின் வாழ்வில் இரண்டறப் பிணைந்து வாழ்நாள் முழுதும் வாழும் கிட்டற்கரிய பேறு வாய்த்து விட்டது!

அவள் உயிர் அமிழ்தில் நனைந்தது.

அவள் உணர்ச்சி மயங்கி வளர்ந்தது

தமிழைக் கற்குந் தோறும் புலவன் நெஞ்சம் நெக்கு நெக்குருகி விழி நீர் வார; மெய்ம்மயிர் பொடிக்கச் சிலிர்ப்பதைப் போலக் காதல் நினைவின் கவர்ச்சியால் சிலிர்த்துருகினாள் வெள்ளிவீதி.

(வளரும்)

# மறு வாழ்வு!

அந்தப் பழமையான கோயிலின் வடக்கு வாசலுக்கும் பதினெட்டாம்படிக் கருப்பன் கோயிலுக்கும் மத்தியில் நிற்கும் பெரிய இலுப்பை மரப் பொந்திலிருந்த ஆந்தையொன்று "கீர்...கீர்" என்று நீண்ட குரலெடுத்து அலறி ஓய்ந்தது. பகலெல்லாம் அருவிக் கரையிலும் அதையடுத்த கடை வீதிகளிலும் வீடுகளிலும் சுற்றித் திரிந்து அங்கு வருவோர் போவோரின் கையிலிருக்கும் உணவுப் பண்டங்களைத் தட்டிப்பறித்தும் வசதி படைத்தோர் வாங்கிப் போடும் கடலை, முறுக்கு, தேங்காய், பழம் ஆகிய வற்றை ஆசையோடும் அச்சத்தோடும் தின்று வயிற்றை நிரப்பிவிட்டு இரவிலே அந்த இலுப்பை மரக்கிளையின் உச்சிக் கொம்பிலே தூங்கிக் கொண்டிருந்த குரங்குகளில் ஒன்று, ஆந்தையின் அலறல் சத்தம் கேட்டுக் கண்விழித்து அடுத்த குரங்கைக் கையால் பிராண்டி இலேசாகக் கத்திவிட்டு மீண்டும் தூக்கத்தில் ஆழ்ந்தது. குரங்கின் குறும்பால் கிளை குலுங்க அங்கிருந்த காக்கை, 'கா...கா...'என மெல்லிய குரலில் கரைந்து விட்டுக் கண்ணயர்ந்தது.

பொழுது இன்னும் விடியவில்லை. முன்னிலாக் காலமாகையால் எங்கும் கும்மிருட்டாக இருந்தது. என்ன காரணத்தாலோ அந்தப் பகுதியிலுள்ள கோயில் பிரகார மின்விளக்குகளும் எரியவில்லை. மணி மூன்று இருக்கும். அருவிக்குக் குளிக்கச் செல்லும் ஆள் நடமாட்டமும் இல்லை. 'ஓ'...என்ற அருவியின் நீர் இரைச்சல் மட்டும் கேட்டுக் கொண்டிருந்தது

ஒருகாலத்தில் யானை கட்டப்பட்டிருந்த அந்த வடக்கு வாசலின், அடைப்பட்டுக் கிடக்கும், பெரிய கதவுகளின் நடையையொட்டிய கல்தூண் ஓரம் தனது காவித்துணிப் படுக்கையில் படுத்திருந்த முத்துப் பண்டாரத்திற்குத் தூக்கமே வரவில்லை. புரண்டு புரண்டு படுத்துக் கொண்டிருந்தார். பொதுவாக அவர் எப்போதுமே பாதி இரவு வரை துங்குவதில்லை. ஒரு மணியிலிருந்து நான்கு மணி வரை சிறிதே கண்ணயர்வார்; அவ்வளவுதான் அவரது தூக்கம். ஆனால் கடந்த இரண்டு நாட்களாக அவருக்கு அந்தத் தூக்கம்கூட இல்லை. தூக்கம் வரவில்லை என்றாலும், தலைப் பொட்டலத்தைத் தொட்டுப் பார்ப்பதும் தனது நீண்டு வளர்ந்த தாடியைத் தடவி விடுவதுமாகக் கண்ணை மூடிக்கொண்டே படுத்துக் கிடந்தார். கடந்த இரவில் நடந்த நிகழ்ச்சி அவரை இரு கூராகப் பிளந்து கொண்டிருந்தது.

பதினெட்டாம் படிக்கருப்பன் கோயிலுக்குச் செல்லும் பாதையை ஒட்டிய மேல் புறத்தில் பக்தர்கள் தங்கிச் சமையல் செய்து கொள்வதற்காகக் கட்டப்பட்ட தகரப் பிறையில், காலை நேரத்துக் கடுங்குளிர் காரணமாகவோ குறைவயிற்றில் கிள்ளிய பசி காரணமாகவோ குழந்தை ஒன்று ஈனக்குரலெடுத்து அழுதது. அதன் அருகிலே அரைகுறையானாலும் அழுக்கேறி இருந்தாலும் அழகிய ஆடையுடனும் அலுத்த மேனியுடனும் தோன்றினாலும் பழுகக் காச்சி, அடித்து நீட்டி வார்த்தெடுத்த இரும்பைப்போல் உறுதியான உள்ளத்தோடும் படுத்துக்கிடந்த அதன் தாய், கிழிந்து கசங்கிப்போன சேலைத் தலைப்பை எடுத்துப் போர்த்திக் கையால் தட்டிக் கொடுத்தாள். அன்னையின் அரவணைப்பில் தன்னை மறந்து, அக்குழந்தை அழுகை நீக்கித் தூங்கத் துவங்கியது

கப்பிக் கவிந்து கிடந்த இருள் மெல்ல மெல்ல விலகியது. மரத்தின்மீதும் மாடத்தின்மீதும் அடைந்து கிடந்த பறவை இனங்கள் இறகடித்துப் பாடிப் பறந்து சென்றன. ஆண் குரங்குகளைத் தொடர்ந்து குட்டியைத் தம் வயிற்றோடு வைத்தணைத்த பெண் குரங்குகளும் வரிசையாக இறங்கி ஓடின. அருவியிலே நீராடச் செல்லும் ஆள் அரவமும் கேட்டது. பொழுது நன்றாக விடிந்தது.

ஆனால் இரவெல்லாம் தூக்கம் இல்லாமல் சிந்தனையில் ஆழ்ந்து கிடந்த முத்துப் பண்டாரத்தின் மன இருள் மட்டும் விடியவே இல்லை. இருந்தாலும் பழக்கம் காரணமாக எழுந்து பரபரவென்று படுக்கையைச் சுற்றி வைத்தார். கிழக்கு பார்த்து நின்று கொண்டு கைகளால் முகத்தையும் கண்களையும் துடைத்துவிட்டு மெல்லக் கண் விழித்தார். விடிவான ஒளியில் பாறை மீதுள்ள கலையரங்கும் பக்கத்தேயுள்ள பயணிகள் விடுதியும் நன்கு தெரிந்தன. ஏக்கப் பெருமூச்சோடு வடக்கே திரும்பிப் பார்த்தார். குழந்தையை அணைத்துக் கொண்டு படுத்திருந்த அந்தப்பெண் இன்னும் எழுந்திருக்கவில்லை. அவள் மட்டும் அங்கு வராதிருந்தால்...?

எதையோ எண்ணிக் கொண்ட அவர் காலைக் கடன்கள் முடிப்பதில் முனைந்தார்.

**இளங்கீரன்**

கோயிலைச் சுற்றிக் குடியிருக்கும் மற்றப் பண்டாரங்கள் கண் விழிப்பதற்கு முன்பே அவர் தினமும் எழுந்து விடுவார். காலைக்கடன் முடித்து ஈரம் உலராத உடலுடன் பூசையையும் முடித்துத் தன் கைவசமுள்ள மூலிகைகள், மருந்துகள், மாந்திர மருத்துவ ஏடுகள், பழைய துணிமணிகள் ஆகியவற்றை எடுத்துக்கொண்டு ஆறு மணிக்கெல்லாம் கோயில் முன் வாசலுக்கு வந்து விடுவார். ஆனால் இன்று அவருக்கு எந்த வேலையும் ஓடவில்லை.

ஆமை வேகத்தில் தனது கடன்களை முடித்து விட்டு அருவித் தண்ணீர் ஓடும் வாய்க்கால் அருகிலுள்ள பாறையில் அமர்ந்தார். இடுப்பிலே செருகி இருந்த துணிப்பையை எடுத்து அதிலிருந்து ஒரு சிட்டிகை திருநீற்றை அள்ளி உள்ளங்கையில் வைத்து, அதில் அளவோடு தண்ணீர் விட்டுக் குழைத்தார். பின்னர் மூன்று விரல்களால் அதைத் தொட்டு நெற்றி, மார்பு, தோள், முதுகு, முழங்கை, முழங்கால் ஆகிய இடங்களில் பட்டை பட்டையாகத் தீட்டினார். இருகரங்களையும் கூப்பித் தலைக்குமேல் உயர்த்திக் கண்களை மூடிக்கொண்டு தான் கற்ற தேவாரம், திருப்புகழ், திருவாசகம் ஆகியவற்றைப் பாடி ஆண்டவனை நினைத்துப் பூஜையை முடித்தார்.

உடல் இந்த வேலைகளில் ஈடுபட்டிருந்தாலும் அவரது உள்ளமும் அதில் எழும் எண்ணமும் தகரப் பிறையில் குழந்தையை அணைத்துக் கொண்டு தூங்கும் பெண்ணையே சுற்றிச் சுற்றி வட்ட மிட்டன.

இரவிலே நடந்த நிகழ்ச்சியை ஒருமுறை நினைத்துப் பார்த்தார். ஒருபுறம் வேதனையும் மற்றொருபுறம் வெட்கத்தையும் தந்து, அது, அவரை வாட்டி வாட்டி வதைத்து எடுத்தது. ஏக்கப் பெருமூச்சோடு தலைகவிந்தார்.

## 2

பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னால் முத்துப் பண்டாரம் குற்றாலத்திற்கு வந்தார். அப்போது அவருக்கு வயது இருபது. அவரோடு பேசியவர்களுக்கும் பழகியவர்களுக்கும், அவர், வடஆற்காடு மாவட்டம் வேலூரைச் சேர்ந்தவர் என்பது தெரியாது. அதைப்பற்றி யாரும் அவரிடம் கேட்டதும் இல்லை; அவர் சொன்னதும் இல்லை.

கொதிப்பேறிய உடலுக்கும் குழம்பிப் போன உள்ளத்திற்கும் அருவிக் குளிப்பால் குளிர்ச்சியூட்டவோ அலுக்காமல் சலிக்காமல், உழைக்காமல் களைக்காமல் இருந்த இடத்திலேயே இருந்து வருவோர் போவோரிடம் பல்லைக்காட்டிப் பரிவோடு பேசி அவரிடும் பிச்சையை வாங்கி வயிறு வளர்க்கவோ அவர் குற்றாலத்தைத் தேடி வரவில்லை.

சின்னஞ்சிறு வயதுமுதலே அவருக்கு ஒரு ஆசை! 'கருகரு'வென்று தாடி வளர்க்க வேண்டும்; சடாமுடி சுற்றவேண்டும்; காவிதரித்துக் கமண்டலம் ஏந்திக் காடு மேடு சுற்றவேண்டும். எல்லோரும் தன்னைப் பெரிய ஞானி என்று அழைக்கவேண்டும்; மரியாதை செய்யவேண்டும். இந்த ஆசையில்தான், கோயில் குளங்களில் நடக்கும் கோலாகல விழாக்களில் தன்னை மறந்து—தன்னைச் சுற்றிய உலகத்தை மறந்து தியானம் செய்யும் சன்னியாசிகளை, அவர் உற்றுப் பார்ப்பார். பசி, தூக்கத்தை மறந்து அவர்கள் பின்னாலேயே சுற்றித் திரிவார். அவர்களிடம் என்ன மகிமை இருக்கிறது என்பதை அறியத் துடிப்பார்.

அந்தத் துடிப்பு அவரைச் சும்மா விடவில்லை, பதினைந்தாம் வயதில் ஒரு நாள் அவர் ஒரு சாமியாரைச் சந்தித்தார். அவரிடம் இருந்த ஏட்டுச் சுவடிகளைப் பார்த்ததும் தன் வீட்டில் பாழடைந்து படிப்பாற்று மூலையில் கிடந்த பழைய சுவடிகள் அவருக்கு நினைவு வந்தது. யாரும் அறியாமல் அந்த ஏட்டுச் சுவடிகளையும் புத்தகங்களையும் அள்ளிச் சென்று சாமியாரிடம் காட்டினார். அவைகளை ஆவலோடு புரட்டிப் படித்துப் பார்த்த சாமியார், "இது பழங்காலச் சித்தர்களின் பாடல்களும் வைத்திய முறையும் ஆகும்; என்னோடு வந்தால் நான் உனக்கு இதனைக் கற்றுத்தருவேன்" என்று கூறினார். அவைகளைக் கற்றறிய ஆவல் கொண்டார் முத்து. அதற்காகச் சாமியாருடனேயே இரண்டு நாட்கள் தங்கினார்.

இதனை அறிந்த முத்துவின் தாய் கன்னியம்மாள், அழுதாள்; அரற்றினாள். மகனின் பொல்லாத ஆசையைக் கண்டு பதைபதைத்தாள். தனக்குப் பிறகு தன் குடும்பம் அழிந்து விடாமல் காப்பாற்ற வந்த ஒரே மகன் எங்கே தன்னை மறந்து சாமியாராக ஆகிவிடுவானோ என்று பயந்தாள். அவனது மனதை மாற்றி இல்லறத்தில் ஈடுபடுத்த மூனைந்தாள். சுற்றத்தார் சொன்னபடி முத்துவை அழைத்து வந்து திருமண ஏற்பாடுகள் செய்தாள்.

ஏட்டுச் சுவடிகளை மூட்டைகட்டி வைத்து விட்டுத் தாயின் தொல்லை தாங்காது தனது பதினாறும் வயதில் முத்து மணமேடை ஏறினார். துறவற எண்ணத்தைச் சற்றே ஒதுக்கிவைத்து விட்டு இல்லற வாழ்வில் ஈடுபட்டார்.

காலத்தின் கோலத்தால் ஒரு குழந்தையைப் பெற்றெடுத்த முத்துவின் மனைவி கண்மூடி மீளாத் துயில் கொண்டாள். அவளையடுத்துத் தன் தாயையும் அவர் இழந்தார். மூன்று மாதமே நிரம்பிய—தன் இரத்தத்தின் இரத்தம்—சின்னஞ்சிறு குழந்தையை எடுத்து வைத்துக் கொஞ்சவும் முடியாமல் குமுறி அழவும் முடியாமல் அவர் தவித்தார் அவர்படும் அவரது துயரைக்கண்ட சகோதரி, அச்சிறு குழந்தையைத் தன்னோடு எடுத்துச் சென்று விட்டாள். முத்து, தனிமரமானார்.

இன்பமும் துன்பமும் நிறைந்த மனித வாழ்வில் முற்றும் துறந்துவிட இருந்த முத்து, தன் தாயின் கண்ணீரால் கரைக்கப்பட்டு இல்லற வாழ்வில் ஈடுபட எண்ணினார். ஆனால் அந்த வாழ்வும் அவருக்குக் கை கூடவில்லை. உற்றார் பெற்றார் சுற்றம் சூழல் எல்லோரையும் மறந்து விட்டு மீண்டும் பழைய துறவறப் பாதையிலேயே பயணத்தைத் துவங்கினார்.

(வளரும்)

# நமக்கும் நல்லது! நாட்டுக்கும் நல்லது!



## பன்னிரண்டு ஆண்டுகளில் வருவாய் இரட்டிப்பாகிட தமிழக மாநிலத் திட்டக் குழுவின் திட்டங்கள்

சமதர்ம சமுதாய அமைப்புக்கு வழிவகுக்கும்
நிலச் சீர்திருத்தம்!
வழித் தடங்கள் நாட்டுடமை!
ஏழை எளிய மக்களுக்கு
இலவச வீட்டுமனை! நிலப் பட்டா!
பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு
உதவிகள்! சலுகைகள்!
பிச்சைக்காரருக்கு மறுவாழ்வு!
குடிசைமாற்று வாரியம்!
கண்ணொளி வழங்கும் திட்டம்!

இப்படி நமது அரசு ஆற்றிடும் பணிகளால்
புதிய வாழ்வு மலர்ந்திட
நாம் செய்ய வேண்டிய கைமாறுதான்

**குடும்பநலத் திட்டம்**

பெருகிடும் மக்கள் தொகையே
இன்றைய பெரும் பிரச்சினை!
எனவே
திட்டமிட்ட குடும்பம்:—
நமக்கும் நல்லது! நாட்டுக்கும் நல்லது!

# அடுத்த குழந்தை இப்போது வேண்டாம்! இரண்டுக்குப் பிறகு எப்போதும் வேண்டாம்!

குடும்ப நலத்துறை,
தமிழ்நாடு அரசு.


ஆசிரியர் வெளியிடுபவர் சி. என். ஏ. இளங்கோவன் அவர்களால், காஞ்சிபுரம்-3,
66. திருக்கச்சிநம்பித் தெரு, அல்லி அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்படுகிறது.